## பத்திரிக்கை செய்தி

## பட்டா மாற்றம் செய்ய ரூ.10,000/- லஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அதிகாரிக்கு உடந்தையாக செயல்பட்ட தனியார் கைது.

புகார்தாரர் வெங்கடேசன், மேற்கு தெரு, கரடி சித்தூர், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் கரடி சித்தூர் கிராம நிர்வாக அலுவலகத்தில் பட்டா மாறுதலுக்கு மனு செய்துள்ளார். மனுவினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.பெரியபிள்ளை, கிராம நிர்வாக அதிகாரி, கரடி சித்தூர் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.10,000/- தர வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கள்ளக்குறிச்சி பிரிவில் புகார் மனு சமர்பித்துள்ளார். மனுதாரர் கொடுத்த புகார் பேரில் இன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.பெரியபிள்ளை, கிராம நிர்வாக அதிகாரி அவர்களின் உத்தரவின் பேரில் திரு.பொன்னுச்சாமி, தனியார் அவர்கள் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.10,000/-யை பெற்றுக் கொண்டு தப்பிச் சென்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார். திரு.பெரியபிள்ளை, கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் தலைமறைவாகி விட்டார்.